### மழையினால் பாதிக்கப்படும் சென்னை மக்களுக்கு

# அம்மா உணவகங்களில் இலவச உணவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, அக். 18 -**

**சென்னை மாநகரில் மழையினால் பாதிக்கப்படும் பகுதிகளில் ஏழை, எளிய மக்களுக்கு அம்மா உணவகங்களில் இரு நாட்கள் இலவசமாக உணவு வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

வடகிழக்குப் பருவமழை நிவாரணப் பணிகள் குறித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:

நேற்று அதிக அளவில் பெய்த வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், அனைத்து நிவாரணப் பணிகளும் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தாழ்வான பகுதிகளில் வாழும் மக்கள் நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான உணவு மற்றும் இதர உதவிகள் பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், சென்னை மாநகரத்தின் மற்ற பகுதிகளில் வாழக் கூடிய ஏழை, எளிய மக்கள் உணவு அருந்தக்கூடிய அம்மா உணவகங்களிலும், இன்றும் நாளையும் இலவசமாக உணவு வழங்கப்படும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

### ஜம்மு – காஷ்மீர்

# முதலமைச்சராக உமர் அப்துல்லா பதவி ஏற்றார்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சார்பில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்றார்!

*ஸ்ரீநகர், அக்.18-*

ஜம்மு - காஷ்மீர் முதலமைச்சராக தேசிய மாநாட்டுக் கட்சியின் துணைத் தலைவர் உமர் அப்துல்லா பதவி ஏற்றார். துணை முதலமைச்சராக சுரேந்தர் குமார் சௌத்ரி பதவி ஏற்றார்.

இப்பதவி ஏற்பு விழாவில் முதலமைச்சர் சார்பில் நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பங்கேற்றார்.

90 தொகுதிகளைக் கொண்ட ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேச சட்டப் பேரவைக்கு 3 கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் இந்தியா கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து, தேசிய மாநாட்டுக் கட்சியின் உமர் அப்துல்லா, சட்டமன்ற கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்நிலையில், ஸ்ரீநகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஜம்மு காஷ்மீர் முதலமைச்சராக தேசிய மாநாட்டுக் கட்சியின் துணைத் தலைவர் உமர் அப்துல்லா பதவி ஏற்றார். அவருக்கு துணை நிலை ஆளுநர் மனோஜ் சின்ஹா பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து துணை முதலமைச்சராக சுரேந்தர் குமார் சௌத்ரி பதவி ஏற்றார். சக்கீனா இத்து, ஜாவேத் அகமத் ராணா, ஜாவேத் அகமது தார் மற்றும் சுயேட்சை எம்.எல்.ஏ., சதீஷ் குமார் சம்ப் ஆகிய 4 பேர் அமைச்சர்களாக பதவியேற்றனர்.

பதவியேற்பு விழாவில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி உள்ளிட்டோர் பங்கேற்றனர். பிரகாஷ் காரத், டி.ராஜா, அகிலேஷ்யாதவ் உள்ளிட்ட இந்தியா கூட்டணிக் கட்சி தலைவர்களும் உமர்அப்துல்லா பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டனர்.

### சாம்சங் தொழிலாளர்கள் பிரச்சினைக்கு சுமூகமாகத் தீர்வு : அண்ணா கலைஞரின் வாரிசு என்பதை

# கழகத் தலைவர் நிரூபித்து விட்டார்! பாராட்டும் நன்றியும்!

## தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளர் மு.சண்முகம் எம்.பி. அறிக்கை!

*சென்னை, அக். 18 -*

சாம்சங் தொழிலாளர்கள் பிரச்சினையை சுமூகமாகத் தீர்த்து அண்ணா, கலைஞரின் வாரிசு என்பதை கழகத் தலைவர் நிரூபித்து விட்டார், அவருக்கு நன்றியும், பாராட்டும் என்று தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவரது அறிக்கை வருமாறு: -

தமிழகத்தில் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் காலத்தில் இருந்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலம் வரையிலும் பல்வேறு போராட்டங்களை சந்தித்தும் அதற்கு முடிவு காண்பதற்கும் மறைந்த நம்முடைய தலைவர்கள் எல்லாம் எடுத்து முயற்சியை நான் கண்டு வியந்திருக்கின்றேன். போராட்டத்தின்போது பல்வேறு உணர்ச்சிவசத்தின் காரணத்தினாலும் திருத்தி பேசும் பத்திரிகைகளின் பிரச்சாரங்களினாலும் சற்று மனது காயப்பட்டாலும் கழகத் தலைவர்கள் எல்லாம் அமைதியாக தொழிலாளர்கள் பக்கம் இருந்து பிரச்சினைகளை முடித்த வரலாறு என்பது பல உண்டு.

ஒரு முறை திரைப்படத் தொழிலாளர்கள் பிரச்சினையில் முடிவு எட்டப்பெறாத நிலையில் தலைவர் கலைஞர் அவர்களே விடிய விடிய அமர்ந்து பேசி தன்னுடைய இல்லத்தில் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டவர்களுக்கு சோர்வு ஏற்படாமல் இருக்க தேநீர் வழங்கி விடியற்காலையில் பிரச்சினையை முடித்த சரித்திரம் எனக்கு ஞாபகத்தில் வருகிறது.

அதேபோல் சாம்சங் தொழிலாளர்கள் பிரச்சினையில் எவ்வளவோ விமர்சனங்கள் இருந்தாலும் மிகப் பொறுமையாக, ஏற்றுக் கொள்ள மனமில்லாத நிர்வாகத்தையும் வழிக்குக் கொண்டு வந்து போராட்டக் களத்தில் இருந்த தொழிலாளர்களின் இசைவுக்கேற்றவாறு ஒரு முடிவுக்குக் கொண்டு வர தக்க ஆலோசனைகளை வழங்கி இந்தப் பிரச்சினையை சுமூகமாக முடித்த தமிழக முதல்வர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு தொ.மு.ச. பேரவை தனது நெஞ்சார்ந்த நன்றிதனை தெரிவித்துக் கொள்கிறது.

அரசின் அழைப்பினையேற்று ஒத்துழைப்பு நல்கிய தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இந்தப் பிரச்சினையை தீர்த்து வைக்க முயற்சிகள் மேற்கொண்ட அமைச்சர் பெருமக்களுக்கும் குறிப்பாகத் தொழிலாளர் துறை அலுவலர்களுக்கும் தொ.மு.ச. பேரவை நன்றி பாராட்டி மகிழ்கிறது.

இவ்வாறு தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# அரியலூர் மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

*அரியலூர், அக். 18 -*

அரியலூர் மாவட்ட கழக ஆலோசனை கூட்டம்,கழக சட்டத்திட்ட திருத்தக்குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர் தலைமையில் மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்டக் கழகச் செயலாளர், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்துகொண்டு அரியலூர் மாவட்டத்திற்கு கழக நிகழ்ச்சி மற்றும் மாவட்ட வளர்ச்சி பணிகள் குறித்த ஆய்வு கூட்டத்திற்கு, 22ம் தேதி வருகை தரும் கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சிறப்பாக வரவேற்று நிகழ்ச்சிகளை மிகவும் சிறப்பாக நடத்துவது குறித்தும், கழகத் தோழர்கள் வாக்காளர் பட்டியலை சரிபார்த்தல், கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குவது மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்தும் கலந்தாலோசனைகள் வழங்கி உரையாற்றினார்.

இதில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பீ. பாலசுப்பிரமணியன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதா பாலு, மாவட்டக் கழக பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றியக் கழக செயலாளர்கள் இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா. அன்பழகன், கோ.அறிவழகன், அசோகசக்ரவர்த்தி, ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள்,

வி.எழில்மாறன், ப.தனவேல், நகர கழக செயலாளர்கள் இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர் செயலாளர்கள் கோபாலகிருஷ்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தெய்வ. இளையராஜா,

மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி. லூயிகதிரவன், பொதுக் குழு உறுப்பினர்கள் இரா. பாலு, சி.ஆர்.எம். பொய்யாமொழி,

வி.எம்.ஷாஜகான்,சுமதி கருணாநிதி, அரியலூர் தொமுச செயலாளர் பி.வி. அன்பழகன், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் ஜெயகுமார், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் கருப்புசாமி,மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் குலோத்துங்கன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### மைலம் சட்டமன்றத் தொகுதியில்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## தொகுதிப் பொறுப்பாளர் கடலூர் புகழேந்தி அறிவுறுத்தல்!

மைலம், அக். 18 –

கழகத் தலைவர்–முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுபடியும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டில் உள்ள 234 தொகுதிகளிலும் தேர்தல் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் விழுப்புரம் வடக்கு மாவட்டம் மைலம் சட்டமன்றத் தொகுதி சார்பில் தேர்தல் பார்வையாளர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்ட ஆலோசனைக் கூட்டம் மயிலம் வடக்கு ஒன்றியம் தீவனூரில் நடைபெற்றது.

விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முன்னாள் அமைச்சரும்,செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான், தேர்தல் பணிக்குழு செயலாளரும் மைலம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் கடலூர் புகழேந்தி ஆகியோர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினர்.

இதில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், தலைமை தீர்மானம் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மயிலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன்,வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார், ஒன்றியச் செயலாளர்கள் அண்ணாதுரை, ராஜாராமன், மணிமாறன், செழியன், துரை, இளம்வழுதி, பொதுக்குழு உறுப்பினர்கள் வீடூர் ரவி, சாந்தி ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர் அன்பு செழியன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அணி அமைப்பாளர் செந்தில் குமார், அமைப்புசாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன், ஒன்றிய கவுன்சிலர்பரிதா சம்சுதீன்,நிர்வாகிகள் சேகர், விவசாய அணி பாஸ்கர், தீவனூர் சேகர், ரமேஷ், பிரபு உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஆலோசனை கூட்டத்தில் எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் மைலம் தொகுதி சட்டமன்றத் தேர்தலக்காக கழக நிர்வாகிகள் கடுமையாக உழைக்க வேண்டும்.

முதலமைச்சரின் பல்வேறு சாதனைகளையும், திண்டிவனம் தொகுதியில் கொண்டுவரப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களை வாக்காளர் இடத்தில் கொண்டு செல்லவேண்டும்.

மேலும் வாக்காளர் பட்டியலில் புதிய வாக்காளர்கள் சேர்ப்பதற்கான பணிகளையும் இறந்தவர்களுடைய பெயர்களை நீக்குவதற்கான பணிகளையும் மேற்கொள்ள வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.



கோவை மாவட்டம் – காரமடை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் முடிவுற்ற பூங்காக்கள் மற்றும் நிழல் குடைகள் உள்ளிட்ட முடிவுற்ற பல்வேறு நலத்திட்ட பணிகளை நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.இராசா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, காரமடை நகரச் செயலாளர் வெங்கடேஷ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.ஆர்.சண்முகசுந்தரம், அவைத் தலைவர் புருஷோத்தமன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணைத் தலைவர் மனோகரன், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் ராம் குட்டி, காரமடை நகரமன்றத் தலைவர் உஷா வெங்கடேஷ், நகராட்சி ஆணையாளர் மனோகரன் உள்ளிட்ட நகராட்சி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வடகிழக்கு பருவமழை: மீட்புப் பணியில் இடைவிடாது பணியாற்றிய

# தூய்மைப் பணியாளர்களுக்கு நலஉதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, அக். 18 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வடகிழக்கு பருவமழை மீட்பு பணிகளில் இடைவிடாது பணியாற்றி வரும் துப்புரவு பணியாளர்களுக்கு சிற்றுண்டி, பிரட், போர்வை உள்ளிட்ட உதவி பொருட்களை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2024) சேப்பாக்கம் , திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், வடகிழக்கு பருவமழை மீட்பு பணிகளில் இடைவிடாது பணியாற்றி வரும் 600க்கும் மேற்பட்ட துப்புரவு பணியாளர்களுக்கு சிற்றுண்டி, பிரட், போர்வை உள்ளிட்ட உதவி பொருட்களை வழங்கினார்.

தொடர்ந்து துணை முதலமைச்சர் அவர்கள் சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதி மண்டலம் 9 க்குட்பட்ட 116 வது வார்டு வெங்கட்ரங்கம் பிள்ளை தெருவில் செயல்பட்டு வரும் மாநகராட்சி சமுதாய நலக் கூடத்தில் பொதுமக்களுக்கு உணவு வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள சமையல் கூடத்தில் உணவு சமைக்கும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ளதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் சமுதாய கூட வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மழைக் கால சிறப்பு மருத்துவ முகாமில் உள்ள மருந்துகள் குறித்து மருத்துவரிடம் கேட்டறிந்ததுடன், முகாமிற்கு வந்திருந்த பொதுமக்களிடம் மருத்துவ தேவைகள் குறித்தும் கேட்டறிந்தார். சிறப்பு மருத்துவ முகாமில் 1 மருத்துவர், செவிலியர், மருந்தாளுநர் உள்பட 6 பணியாளர்கள் பணியில் ஈடுபட்டுள்ளதையும் பார்வையிட்டார்.

இந்த நிகழ்வுகளில் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டல குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மண்டல கண்காணிப்பு அலுவலர் மு.பிரதாப், துணை ஆணையர் ( பணிகள்) சிவ.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னையில் மழைநீர் தேங்காததே வெள்ளை அறிக்கைதான்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!

செய்தியாளர்களிடம் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியதாவது:

மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படக்கூடாது என்ற நோக்கில் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். பணியில் ஈடுபட்ட தூய்மை பணியாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடர்ந்து மழைநீர் வடிகால் பணிகள் குறித்து வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி கூறியது தொடர்பான கேள்விக்கு பதிலளித்த உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையில் மழைநீர் எங்கும் தேங்காமல் இருப்பதே வெள்ளை அறிக்கைதான் எனத் தெரிவித்தார்.

### பல்லாவரம் தொகுதி - மழைநீர் தேங்கி நின்ற குரோம்பேட்டை ஜி.எஸ்.டி சாலையில்

# கொட்டும் மழையில் பல்லாவரம் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆய்வு!

*பல்லவபுரம், அக். 18 -*

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட குரோம்பேட்டை ஜிஎஸ்டி சாலை வெற்றி திரையரங்கம் அருகில் ஒவ்வொரு பருவ மழையின் போதும் அதேபோல் பாண்ட்ஸ் வேம்பாலம் அருகில் மழைநீர் தேங்கி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டு வந்தது. அதுபோல் தீவிரமடைந்து பெய்த பருவ மழையின் காரணமாக குரோம்பேட்டை ஜிஎஸ்டி சாலையில் மழைநீர் தேங்கி நின்று போக்குவரத்துக்கு இடையூறு ஏற்பட்டது.

தகவல் அறிந்து பல்லாவரம் இ. கருணாநிதி எம்.எல்.ஏ நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகளுடன் குரோம்பேட்டை வெற்றி திரையரங்கத்தில் இருந்து பாண்ட்ஸ் கம்பெனி மேம்பால வரை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார் உடனடியாக மழை நீரை வெளியேற்றவும் தொடர்ந்து மழைநீர் தயங்காமல் இருக்கவும் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார் அதைத் தொடர்ந்து நெடுஞ்சாலையில் பல இடங்களில் குண்டும் குழியமாக இருப்பது அறிந்து அதை உடனடியாக சரி செய்யுமாறு அதிகர்களிடம் கேட்டுக் கொண்டார் உடனடியாக சாலை சரி செய்யும் பேட்ச் ஓர்க் மேற்கொள்ளப்பட்டன அதிகம் ஆய்வு செய்து அதேபோல் குண்டு குளமாக அனைத்து இடங்களிலும் பேட்ச் ஓர்க் மேற்குழுமாறும் கேட்டுக்கொண்டார் அதைத்தொடர்ந்து பல்லாவரம் துரைப்பாக்கம் ரேடியல் சாலையில் இங்கிலீஷ் எலக்ட்ரிக் கம்பெனி நகரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து பம்மல் பகுதியிலும் ஆய்வு மேற்கொண்டார். மழையில் பல்லாவரம் பகுதியில் பல்வேறு மையடங்களுக்கும் காலை 7:00 மணி முதல் தொடர்ந்து ஆய்வுகளை மேற்கொண்டார்.

அப்பொழுது மாநகராட்சி ஆணையர் மண்டல தலைவர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, வே.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி அதிகாரிகள், நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !

